# சுட்டி

96

மாத இதழ்

பிப்ரவரி '89

80 காசு



நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள் முதல்வரே!

- நடுப்பக்கம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# என்.டி.ஆர். கடவுளாவாரா?

அண்ணா இறந்த பிறகுதான் அண்ணா சிலைகள், அண்ணா நகர்கள், அண்ணா வீதிகள் தமிழகத்தில் பரவலாயின. ஆனால் ஆந்திராவின் அண்ணாவாகத் தன்னை நினைக்கும் என்.டி.ராமராவ் உயிருடனிருக்கும் போதே, பார்க்குமிடமெல்லாம் தன் உருவம் நீக்கமற நிறைத்திருக்க வேண்டுமென ஆணை யிட்டுள்ளார்.



இந்த ஆணைப்படி அரசு அலுவலகங்கள், அரசு நிலையங்கள், மாநகராட்சி, பஞ்சாயத்து அலுவலகங்கள் போன்ற அனைத்து இடங்களிலும் என்.டி.ஆரின் திருவுருப்படம் இடம் பெறும். அவரது அமைச்சரவையே இதற்கு அங்கீகாரம் அளித்து விட்டது. என்.டி.ஆரே தனக்குப் பிடித்த, தனது அபிமான புகைப்படமொன்றைத் தேர்வு செய்து இதற்கு அளித்துள்ளார்.

இந்தப் புகைப் படங்கள் அனைத்தும் பிளாஸ்டிக் மேல் பூச்சு செய்யப்பட்டு 16 x 22 அங்குல அளவில் இருக்கும். இது போல 50,000 புகைப்படங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இதற்கு ஆகியுள்ள செலவு மட்டும் ரூ 75 லட்சம் எல்லாம் மக்களின் வரிப்பணம்!

என்.டி.ஆரின் சினிமா படங்களை மக்கள் பார்ப்பது குறைந்து வருகிறது. எனவே தொடர்ந்து தன் உருவம் மக்கள் கண்களில் பட்டுக் கொண்டிருந்தால் தான் அவர்கள் மனதில் தான் நிலைக்கமுடியும் என்று என்.டி.ஆர் கணக்குப் போடுகிறார்.

எனவே இடி அமீன் தனக்குத்தானே சிலை வைத்துக் கொண்டது போல, என்.டி.ஆரும் மாநிலமெங்கும் நாற்சந்திகளில் தன் சிலைகளைத் திறக்கச் சொல்லி வற்புறுத்தினாலும் வியப்பில்லை. என்.டி.ஆரை கிருஷ்ணனின் அவதாரமாக நினைக்கும் மக்கள் மத்தியில், தனக்கு அவர் ஒரு கோயில் கட்டிக்கொண்டு உருவச்சிலையாக அமர்ந்து கொண்டாலும், அங்கு வந்து தேங்காய் உடைக்கவும், கற்பூரம் காட்டவும் பெரிய கூட்டம் வரும்.

— ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# 7 வயது சிறுவனின் இலக்கியங்கள்

குழந்தை இலக்கிய உலகில் ஒரு புதிய வரவு. இதுவரை குழந்தைகள் பாடுவதற்கான இலக்கியமும், குழந்தைகளைப் பற்றிய இலக்கியமுமே வந்துள்ளன. குழந்தையே எழுதிய இலக்கியம் ஒன்று இப்போது வந்துள்ளது. மு.திலீபன் என்னும் ஏழு வயதுப் பையனின் கதை, கவிதை எல்லாம் தொகுக்கப் பெற்று, `அப்பா இங்கே வா, வா' என்னும் பெயரில் சிறு நூலாக வெளிவந்துள்ளது.

ஏழு வயதுப் பையன் கதை, கவிதை எல்லாம் எழுதுவானா? இது என்ன `திருஞானசம்பந்தர்' கதையின் தொடர்ச்சியா? என்று கேட்கத் தோன்றுவது இயற்கைதான். கதை, கவிதை என்றால் உடனே கம்பனோடும், காளமேகத்தோடும், ஒப்பிடக்கூடாது.

குழந்தை எப்படிப் பேசுமோ அப்படி - கடலைப் பார்த்தால் குழந்தைக்கு என்ன தோன்றுமோ அப்படி - இவ்வாறு அந்தச் சிறுவனின் சிந்தனைகள் தூண்டப்பெற்று, எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நாம் கூட, குழந்தைகளாக இருந்த போது, ஏதேதோ சிந்தனைகள் தோன்றியிருக்கலாம். அப்போது யாரும் அதைக் குறித்து வைக்கவில்லை. குறித்திருந்தால், குழந்தை வடிவில் நம்முடைய பழைய புகைப்படத்தைப் பார்த்து ரசிப்பதைப் போல, குழந்தை வயதில் நம்முடைய பழைய சிந்தனைகளையும் பார்த்து ரசித்திருக்கலாம். அந்நூலிலிருந்து சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன:-

*ஆறு என்றால் என்ன திலீபா - `நீட்டான தண்ணி'*

*கிணறு? - `பள்ளமான தண்ணி'*

*கடல்? - `பெரிசான தண்ணி'*

*வானம் ஏன் வளைஞ்சி இருக்கு தெரியுமா?*

*வானம் மெலிசா இருக்குதா, அதான் வளைஞ்ஞ்சிக்குது—*

*பொடவைத் துணி மடிஞ்சிக்குதே அப்பிடி—*

*அப்பா, இங்லீஷ்காரங்கள்லாம் நாட்டவுட்டு போயிட்டாங்கன்னு தானே சொன்னே... அப்ப, ஏன் இங்லீஷ் நல்லா படி படின்னு எல்லாரும் சொல்றீங்க.*

*மெட்ராஸிலே இருக்கற கடலும், கடலூர்ல இருக்கற கடலும் ஒன்னுதானாப்பா... அப்டீன்னா, நான் கடலூர் போயிட்டா, நீ வந்து மெட்ராஸ் பீச்ல வந்து தொடு; நான் வந்து கடலூர் பீச்ல தொடறேன். அப்ப ரெண்டு பேரும் தொட்டுகிட்டாபடி ஆயிடுச்சில்ல...*

(மு.திலீபன், `அப்பா இங்கே வா வா'— 19அ, திரு.வி.க. நகர், ரங்காபுரம் அஞ்சல், வேலூர் 632 009)



FREE E - BOOKS , www.thamizham.net.,



# ஒரு மக்கள் கலைஞனின் கொலை

இந்தப் புத்தாண்டின் முதல் நாளிலே அந்த அராஜகம் இந்தியத் தலைநகருக்கருகே நிகழ்ந்தது. பட்டப் பகலில், நாடகம் நடந்து கொண்டிருக்கும்போதே. இந்தியாவின் மிகச் சிறந்த நாடகக்கலைஞர்களில் ஒருவன் கொல்லப்பட்டான்?

அவன் பெயர் சஃப்தர் ஹாஷ்மி. மக்களின் போராட்டங்களுக்கு நாடகத்தைப் புதிய ஆயுதமாக வடித்தவன் அவன். அவனது ஜன் நாட்டிய மன்ச் குழு வடக்கே புகழ் பெற்றது. இதுவரை 24 வீதி நாடகங்களை 4000 முறை 25 லட்சம் மக்கள் முன்பாக நடத்தியிருக்கிறான்.

இடது கம்யூனிஸ்டு கட்சியின் முக்கிய செயல்வாதியாக விளங்கி, தொழிலாளர்கள் பிரச்சனைகளுக்குத் தோள் கொடுப்பது மட்டுமன்றி, மிகச் சிறந்த நடிகனாகவும், எழுத்தாளனாகவும் விளங்கினான். கலைத்துறையில் நிகழும் எந்த மாற்றங்களாயினும் - மேடை, திரை, ஓவியம், கவிதை எதுவாயினும் அவன் கவனிப்புக்குத் தப்புவதில்லை. வங்காளி, பஞ்சாபி, இந்தி, உருது, சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளும் அவனுக்கு அத்துபடி. டில்லியில் மிக அதிக சன்மானத்திற்குரிய, செய்திப்படங்களின் விரிவுரையாளன் அவன். இதில் ஒரு மாதம் பெறும் சன்மானத்தை வைத்து 11 மாதங்கள் உழைக்கும் வர்க்கத்தை உயர்த்தும் நாடகங்களை நடத்தவும், கட்சிப் பணிகளுக்கும் செலவிடுவான்.

இந்த ஜனவரி முதல் தேதி அவன் நடத்திய நாடகம், குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்கக் கோரிப் போராடும், ஒழுங்குபடுத்தப்படாத தொழிலாளர்களைப் பற்றியது. பெயர்: "ஹாலா போல்". நாடகம் தொடங்கிய 15 நிமிடங்களில் 70 பேர்கள் அடங்கிய குண்டர் படையினர் கைகளில் தடிகள், கத்திகள், உருளைகளுடன் நாடகம் நடக்கும் வீதியில் குறுக்கே போக வற்புறுத்தினார்கள். நாடகம் முடியும் வரை, சுமார் 1/2 மணி நேரம் காத்திருக்கும்படி வேண்டுகோள் விடுத்த நாடகக் குழுவினரைத் தாக்கினார்கள். குழுவில் ஒருவரைத்துப்பாக்கியால் சுட்டார்கள். தம் குழுவினரையும், மக்களையும் பாதுகாக்க முயன்ற ஹாஷ்மியை, திட்டமிட்டபடி, மண்டை எலும்புகள் உடைந்து மூளை நசுங்கி காதுகள் வழியாக வரும் வரை அடித்துக் கொன்றார்கள். காங்கிரசின் கையாளாகவும், ஆளும் வர்க்கத்தின் அம்பாகவும் செயல்பட்ட சுயேச்சை உறுப்பினரை வைத்து இக்கொலையை மக்கள் விரோதிகள் செய்து முடித்தார்கள்.

அவர் கொலைக்குப் பதில் தருவது போல, அவர் கொலை செய்யப்பட்ட அதே இடத்தில், தீரமிக்க அவர் மனைவி, அதே நாடகத்தை மாபெரும் கூட்டத்திற்கு முன் மேடையேற்றினார். பல கூட்டங்கள் போட்டு பேசுவதை விட பெரிய உலுக்கலை இந்த நாடகம் ஏற்படுத்திவிட்டது.

- எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மணமக்கள் விளம்பரங்கள் வெளிப்படுத்தும் உண்மைகள்

1988 செப்டம்பர்த் திங்களில் மணமக்கள் வேண்டும் பகுதியில் வெளிவந்த விளம்பரங்கள் 403. இவற்றுள் 358 விளம்பரங்கள் (88.8%) தத்தம் சாதியிலேயே மணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவித்தன. விளம்பரங்களில் மிகுதியாக இடம் பெற்றிருப்போர் பிராமணர் (50.3%) அதாவது 358 பேரில் 180 பேர்கள். அவர்களும் கூடப் பிராமணர் என்று பொதுவாக விளம்பரம் கொடுக்காமல் தத்தம் கோத்திர, உட்பிரிவுகளையும், மொழி உட்பிரிவுகளையும் கொடுத்துள்ளனர்.

நாயுடு இனத்தைச் சார்ந்தவர்கள் 27 பேர். (7.54%) அவர்களும் கம்மா நாயுடு, கவர நாயுடு, பலிஜா நாயுடு என்று சாதி உட்பிரிவுகளைக் கொடுத்துள்ளனர். பிள்ளை என்ற வெள்ளளார் 19 பேர் (5.3%) அவர்களும் சைவ வேளாளர், கார்காத்த வேளாளர், சோழிய வேளாளர் என விளம்பரம் செய்துள்ளனர்.

சாதி அடிப்படையை ஒப்புக்கொள்ளாத சமத்துவ சமயங்கள் கிருத்துவமும், இசுலாமும். விளம்பரம் தந்த 11 இசுலாமியர் (3.07%) தம் உட்பிரிவுவான சுனி முஸ்லீம், ஷப்பி முஸ்லீம், உருது முஸ்லீம் என்று விளம்பரப் படுத்தியுள்ளனர். 22 கிருத்துவர்கள் (6.14%) தந்த விளம்பரங்களில் கத்தோலிக்க நாயுடு, முதலியார், வெள்ளாளர் என்றும் நாடார் கிருத்துவர் என்றும் பிராட்டஸ்டண்டு வன்னியர், அகமுடையார் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சாதி அடித்தளமே இல்லாத இவ்விரு மதங்கள் கூட இந்தியாவில் மதம் மாற்றம் பெற்ற கிருத்துவர்களிடையே சாதி அற்ற நிலையைத் தோற்றுவிப்பதில் தோற்றுப் போய் விட்டன. தம் சமயத்தின் அடிப்படைக் கோட்பாட்டிற்கு எதிரான சாதிப் பிரிவினைகளை அவை ஒப்புக் கொண்டு விட்டன.

இந்து நாளிதழில் மணம் வேண்டும் பகுதியில் விளம்பரம் செய்வோர் பெரும்பாலும் கற்றவராகவே இருப்பர்; குறிப்பாக ஆங்கிலக் கல்வி உடையவராகவே இருப்பர். ஆனால் கல்வி கற்ற அவர்களே தம் சாதியை முன்னிறுத்தி விளம்பரம் செய்துள்ளனர்!

கல்வி, சாதி மதப் பிரிவினையைத் தவிர்த்திருக்க வேண்டும் மாறாக வளர்த்துள்ளது! — க.ப. அறவாணன்.

## சுட்டி முன் இதழ்கள்

இதழ் 72 முதல் முன் இதழ்களைப்பெற இதழுக்கு 50 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (க.க) அனுப்பினால் உடனே அஞ்சலில் வந்து சேரும்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டிக் குட்டிக் கவிதைகள்

## தேர்தல் வித்தை

எல்லாமுமிழந்த
நிலையிலும்
தலைவர்களின் மீது கொண்ட
நம்பிக்கையின்
அடிப்படையில்
மீண்டும் மீண்டும் மீண்டும்
தொடர்ந்து ஏமாந்திட
இவன் முன் வரும்
இரகசியந்தானென்ன ?

-நாடோடி

## பலன்

தேர்தல் வெற்றிப்பாலம்
கட்டிட உதவிய
சிறுத் தொண்ட அணிலுக்கு
முதுகில்
அரசியல் வாதி இராமன்
போட்ட மூன்று பட்டைகள்
"பரிசு" என்பான் பக்தன்
"நாமம்" என்பேன் நான்!

- ஏ. பாரதி சங்கர்

நாங்கள்
நாத்திகர்கள்
கடவுள்
சாட்சியாக

-யு.கே.செங்கோட்டையன்

தேர்தல் கால வாக்குறுதி
புது வருட வண்ண காலண்டர்
இரண்டும் உதிரும்

-மு.செ. பிரகாஷ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

கிழக்கு ஆசியா:

# ஜப்பான் -- வராத செய்திகள்

இந்தியாவை விட மக்கள் நெருக்கம் மிகுந்த நாடு ஜப்பான். இந்தியாவில் சகிமீட்டருக்கு 227 பேர் தான்; ஜப்பானிலோ 318 பேர்! மேலும் 5 இல் 4 பகுதி ஜப்பான் மலைப்பாங்கானது. மொத்தப் பரப்பளவு நம் மத்தியப் பிரதேசத்தை விடக் குறைவு. அதிலும் கால்பாகத்திற்கும் குறைவான நிலமே சமவெளியாகவும், விவசாயத்திற்கும் மனிதக்குடியிருப்பிற்கும் உகந்ததாக உள்ளது. எனவே இதன் 13 கோடி மக்களும் இதில் தான் நெருங்கி வாழ்கிறார்கள்.



ஜப்பான் நகரத்தில் வாழ்கிறது. 75% மக்கள் நகரங்களில் மட்டுமே வாழ்கிறார்கள். டோக்கியோவைச் சுற்றியுள்ள 30 மைல் தூரத்திற்குள் வாழ்வோர் மட்டும் மொத்த மக்களில் 25% பேர்கள்.

6வது நூற்றாண்டில் நுழைந்த புத்தமதமும் கி.பி. 405ல் புகுத்தப்பட்ட சீன எழுத்து முறையும் ஜப்பானில் கலாச்சார மாற்றத்தைத் தோற்றுவித்தன. ஆசிய நாடுகள் முழுவதும் ஐரோப்பிய நாடுகளுக்கு காலனிகளாகி ஏமாந்த போது ஜப்பான் மட்டும் விழித்துக்கொண்டது. வெளிநாட்டுக்காரர்கள் வியாபாரிகளாகவும் வேதபோதகர்களாகவும் முதலில் வந்து, பின்பு ஆட்சியைப்பிடிப்பார்கள் என்ற எச்சரிக்கை உணர்ச்சியுடன், 17 ஆம் நூற்றாண்டு முதல் 200 ஆண்டுகளுக்கு எந்த அந்நியரும் நாட்டுக்குள் நுழைய கடும் தடை விதிக்கப்பட்டது. மீறி நுழைந்த கிறிஸ்துவ குருமார்கள் நாகசாகியில் படுபயங்கரமாக கொல்லப்பட்டார்கள். இதற்குப் பழி வாங்கவே, அணுகுண்டை போடும் இடமாக அமெரிக்கா, நாகசாகியைத் தேர்ந்தெடுத்தது.

வரலாறு அறிந்த காலம் முதல் எந்த நாட்டிற்கும் அடிமைப்படாத ஜப்பான், அணுகுண்டு வீச்சால் அமெரிக்காவிற்கு அடிபணிய நேர்ந்த அவமானத்தால் நிலைகுலைந்தது. போரில் 30 லட்சம் பேர்களையும், சொத்துக்களையும் இழந்த துன்பங்களையெல்லாம் விட இதுவே இதன் ஆன்மாவைச் சுட்டெரித்தது.

இந்தத் தலை குனிவைச்சரிக்கட்டவே ஜப்பான் உலக வணிக வல்லரசாக கிளர்ந்தெழுந்துள்ளது. உலகில் பார்க்கப்படும் 3 தொலைக்காட்சி பெட்டியில் ஒன்று ஜப்பானில் தயாரானது.

உலக மக்கட் தொகையில் 3% உள்ள ஜப்பானியர் உலக வருவாயின் 10% ஐ பயன்படுத்தி இன்று வசதியாக வாழ்கிறார்கள். 90% மக்களே நடுத்தர வர்க்கத்தினர். (சராசரி தனிநபர் ஆண்டு வருவாய் $10,266) 100% கற்ற வர்கள். எனவே ஒரு நாளைக்கு 6½ கோடி பத்திரிகைகள் வாசிக்கப்படுகின்றன. 178 நாளிதழ்களும், 3500 பருவ இதழ்களும் அவர்தம் தேசிய மொழியில் மலர்கின்றன. ஆண்டுக்கு 31,000 புதிய ஜப்பானிய நூல்கள் வெளிவருகின்றன. இவ்வெண்ணிக்கை அமெரிக்காவில் வெளிவரும் ஆங்கில நூல்களைப் புறமுதுகிடச்செய்துள்ளது.

(ஜப்பானின் இன்னொரு பக்கம்: காண்க இதழ் எண்:86) _

— உலகப்பன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,




FREE E - BOOKS , www.thamizham.net.,

இரண்டாம் பரிசு பெறும் நாடகம்

## எங்கள் தெரு இந்தியாவில் இல்லை!

த. ராஜா

[தெரு விளக்கு வசதி கோரி • கோரிக்கை மனுவுடன் இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த விஜயனும் மற்ற உறுப்பினர்களும் ஊராட்சி நிர்வாக அலுவலரைச் சந்திக்கிறார்கள்]

அதிகாரி:- வாஸ்தவம் தான், ஆனால் இந்த தெருக்கள் இன்னும் ஊராட்சி தெருக்கள் பட்டியலில் சேரவில்லை, எனவே இதில் நான் ஒன்றும் செய்வதற்கில்லை!

விஜயன்:- அப்போ இந்தப்பகுதி இந்தியாவிலேயே இல்லையா? இப்பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வாக்குரிமையிருக்கிறது சார்! இங்குக் குடியிருக்கிற போலீஸ் இன்ஸ்பெக்டரின் வீட்டிற்கு மட்டும் ஊராட்சி வண்டியிலே தண்ணீர் விநியோகம் நடக்கிறது, பல் சமூக விரோத சம்—

அதிகாரி:- (கோபமாக) லுக் மேன் நான் முன்பு சொன்னதுதான் பதில், உன் விளக்கம் தேவையில்லை, நீ போகலாம்!

[விஜயனும் மற்றவர்களும் வெளியேறுகிறார்கள், பின்னர் அதிகாரி டெலிபோன் டயலை சுழற்றுகிறார்]

அதிகாரி:- (தொ.பேசியில்) உங்க வீட்டிற்கு மட்டும் எப்படி தண்ணீர் வருகிறது என்று கேட்கிறான் சார் — ஆமா சார் — சரிசார்— சரிங்க.

[நிர்வாகத்தைக் கண்டித்து ஊராட்சி அலுவலகத்தின் முன் ஆர்பாட்டம் செய்வது என மன்றம் முடிவெடுத்தது! இரண்டு நாள் கழித்து போஸ்டர்கள் ஒட்ட சைக்கிளில் விஜயன் வந்து கொண்டிருந்தான். திடீரென இரண்டு காக்கி லத்திகள் மறித்தன]

காவலர்:- இந்த இருட்டு நேரத்தில் சைக்கிளில் லைட் இல்லாமல் எங்கே போகிறாய்? உன் மீது சந்தேகப்படுகிறோம். ம் வா,வா. ஸ்டேஷனுக்கு.

## புகைப்படப் போட்டி முடிவுகள்

மிகக் குறைந்தவர்களே இப்போட்டியில் கலந்து கொண்ட நிலையில், முதற்பரிசுக்குத் தகுதியுடையதாக ஒரு புகைப்படமும் இல்லை. தேர்ந்தெடுத்த இரண்டாம் பரிசுக்குரிய புகைப்படத்திற்குரியவர்கள்: 1) திரு.எஸ்.சேஷகிரி, 80, சிந்தாமணி லே அவுட், கே.கே. புதூர், கோயம்புத்தூர் - 641 038. 2) திரு.எஸ்.மோகன்ராம், இ-9 என்.பி.மிஷன் அஞ்சல், கோயம்புத்தூர் - 641 011



FREE E - BOOKS , www.thamizham.net.,

சிறுகதை :

# சுட்ட பழமும், சுடாத பழமும்

கெட்டிக்காரன்தான். ஆனாலும், சாரங்கனுக்குத் தலையின் 'வெயிட்' மட்டும் தனியாய் நாற்பது கிலோ. தனக்கு எல்லாம் தெரியும் - தனக்கு மட்டும்தான் தெரியும் என்று நினைக்கிற சுபாவம். பாவம், தன் மோட்டார் பைக் ஏன் 'ஸ்டார்ட்' ஆகவில்லை என்று தெரியாமல், இந்த வேகாத வெயிலில் 'பைக்கைத் தள்ளியபடி நடந்து கொண்டிருக்கிறான்.

"சார் நாலுமைல் போனால்தான் ஊர் வரும்" என்று ஒருவன் சொன்னபோது பகீரென்றது. சாதாரணமாகவே நடந்து பழக்கமில்லை; 'புல்லட்'டையும் தள்ளிக் கொண்டு நடப்பது சாதாரண விஷயமா?

"வேண்டாம் சார், இதோ ஒரு மைல் இப்படிக் குறுக்கே போற ரோட்லே போனா, 'அறியாப்பட்டி'ன்னு ஒரு கிராமம் வரும். அங்கே ஏகாம்பரம் மெக்கானிக்குன்னு கேட்டா சொல்லுவாங்க. உடனே வேலை நடந்துடும்" என்று இன்னொருவன் சொல்ல, எல்லாம் அறிந்தவன், 'அறியாப்பட்டி' நோக்கி நடந்து கொண்டிருக்கிறான்.

கைநிறைய பணமிருக்கிறது. நிறையப் படித்து இரண்டு, மூன்று பட்டம் வாங்கி வைத்திருக்கிறான். எத்தனையோ பேர் இவனுக்குக் கீழே வேலை பார்க்கிறார்கள். எல்லாம் சரி - இப்போதென்ன பிரயோஜனம்? இப்போதைக்கு அந்த மெக்கானிக் ஏகாம்பரம் தான் பெரிய மனுஷன் - சாரங்கனில்லை.

ஒரு வழியாய் அந்தப் பட்டிக்காட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். சட்டையில்லாத உடம்பும், அழுக்கு டிராயருமாய் சிறுவர்கள் கூட்டம் இவனைச் சுற்றிக் கொண்டது. அவர்களைப் பார்க்கவே சாரங்கனுக்குப் பிடிக்கவில்லை. 'யாரும் வண்டியைத் தொடக்கூடாது, தள்ளிப் போங்க' என்று அதட்டினான். கொஞ்ச தூரம் போனபின்பு, 'மெக்கானிக் ஏகாம்பரம் யாரு' என்று கேட்டான்.

'டேய், ஒங்கப்பாவைத் தான்டா தேடி வந்திருக்காரு' என்று சிறுவர்கள் குஷியாய்க் கத்த, 'அப்பா வெளியூருக்குப் போயிருக்காரு' என்றான், கொஞ்சம் உயரமாயிருந்த ஒரு பையன். சாரங்கன் சோர்ந்து போக, என்ன சார், வண்டி ரிப்பேரா! நான் பார்த்துடட்டுமா? என்றான் அதே பையன்.

ஐந்தே நிமிடத்தில் ரிப்பேர் பார்த்து முடித்துவிட்டு, 'காசெல்லாம் ஒண்ணும் வேணாம் சார்– சும்மா 'பிளக்'கைத் துடைச்சுப் போட்டேன் அவ்வளவுதான்– இதுக்குப்போய் இவ்வளவு தூரம் தள்ளிக்கினு வந்திருக்கீங்களே' என்று அவன் சொல்ல, எல்லாப் பையன்களும் சிரித்தார்கள்.

-- சுபவீ.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## அரணை நக்கினால் அரை நிமிடத்தில் சாவா?

அரணை பல்லி வகையைச் சார்ந்த பிராணி காலங்காலமாக பாம்பு, தேள், பூரான் இவற்றோடு அரணையையும் சேர்ந்து நம் கொடிய எதிரியாக நினைத்து வருகிறோம். மற்ற மூன்றும் கடித்தால் தான் விஷம். ஆனால் அரணை நக்கினாலே போதும், அரைநிமிடத்தில் இறந்து விடுவோம் என்று கூறப்படுகிறது.

தமிழ்க் கலைக்களஞ்சியமான அபிதான சிந்தாமணியில் அரணை பற்றிக் காணப்படும் குறிப்பு வருமாறு:-

'இதன் கடி கெடுதி செய்யும். அரணை கடித்தால் மரணம் என்ப' (பக்:81)

இதே மாதிரியான கருத்து பல நாடுகளிலும் நிலவி வருவதாக என்சைகுளோபிடியா பிரிட்டானிகா கூறுகிறது. ஆனால் இவை அனைத்தும் முற்றிலும் தவறான நம்பிக்கைகள் என்றும் அது வலியுறுத்துகிறது.

அரணை பாம்பு மாதிரி நெளிந்து செல்வதாலும், பயத்தை ஏற்படுத்தக்கூடிய பளபளப்புடனும் பிளவுபட்ட நாக்குடன் விளங்குவதாலும் அரணையைப் பற்றிய தவறான பயம் ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் அரணை கறுப்பு எறும்பை விடச்சாதுவானது. அது நாக்கால் நக்கினாலோ, வாயால் கவ்வினாலோ, எந்த வகைக் கெடுதியும் நமக்கு நிச்சயம் ஏற்படாது; இன்னும் சொல்லப்போனால் நம் வீட்டின் சுவரெல்லாம் மேயும் பல்லியை விட அரணை ஒன்றும் ஆபத்தானதல்ல. பல்லி உணவில் விழுந்தால் விஷம். பல்லி எச்சம் நம் உணவில் கலந்தால் கொடிய நஞ்சாகும். விவரம் தெரியாமல் நாம் பல்லியைப் பல்கிப் பெருக அனுமதிக்கிறோம்; அப்பாவியான அரணையை அடித்துக்கொல்கிறோம். வயல் வெளிகளிலும், வீட்டு இடுக்குகளிலும், யாருக்கும் தீங்கு செய்யாது நெளிந்து கொண்டிருக்கும் இந்த அழகிய உயிரினத்திற்கு ஏன் தான் இப்படியோரு அவப்பெயர் ஏற்பட்டிருக்கிறதோ தெரியவில்லை.

சென்னை கிண்டி குழந்தைகள் பூங்காவில் உள்ள பாம்புப் பண்ணையில், பாடம் செய்யப்பட்ட அரணையைப்பாட்டிலில் வைத்து, அதனடியில், யாருக்கும் தீமை செய்யாத, விஷமற்ற அரணையைப் பற்றிய அச்சம் அவசியமற்றது என்று தெளிவுபடுத்தி பொதுமக்கள் பயத்தைப் போக்கும் வாசகத்தை அமைத்திருக்கிறார்கள்.

'லிசர்ட்' எனப்படும் பல்லி வகைகளில் ஒரே ஒரு வகை மட்டுமே நஞ்சுள்ளது. அதுவும் தூண்டப்பட்டால் மட்டுமே கடிக்கும். அப்படி அது கடித்துப் பாதிக்கப்பட்டவர்களும் அபூர்வமே. அந்த வகையும் உலகத்தில் ஐக்கிய அமெரிக்காவிலும், மெக்சிகோவிலும் மட்டுமே காணப்படுகிறது. — சித்தன்.



FREE E - BOOKS , www.thamizham.net.,



# நெஞ்சைத் தொ
# முதல்

☐ உங்களை நம்பித் தேர்தலி
இலட்சியவாதிகள் அல்லர். எனவே செலவி
முறையில் பணம் சேர்ப்பார்கள். இதனை உங்
லஞ்சத்தைக் கட்டுப்பாட்டுக்குள்ளாவது வைக்க முடியுமா?

☐ வறுமையும் அறியாமையும் தொடரும்
அரசியல்வாதிகள் பிழைப்பு நடத்த முடியும் என்ற கூற்றை

☐ ஆங்கில மோகங்கொண்ட நடுத்தர மக்களு
நாட்டில் தமிழ் மொழியை வெற்றிகரமாக அனைத்தின்
குறைந்த பட்சம் கல்வி மொழியாகவாவது மாற்றும் பிடிவா

☐ சிலைவைத்தல், நினைவுச் சின்னம் எழுப்ப
ஆடம்பர விளையாட்டுக்களை முற்றிலும் ஒழித்து விட்டு, கச
உண்மையான செயல்கள் வாயிலாக தமிழினத்திற்கும் மொழிக்
செயல்பட முயல்வீர்களா?

☐ இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் நீங்கள், இ
படுத்தி வரும் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்ப்பீர்களா? தமிழுக்
மிகுதி என்பதை உணர்ந்திருக்கிறீர்களா? அப்படியாயின், தமி
என்ற இழிநிலையையேனும் உங்கள் ஆட்சியில் துணிவுடன்

☐ நேற்றுவரை உங்கள் எதிரிகளுக்கு அடிவரு
பதவி சுகத்தை விடாமல் அனுபவிக்க, வெட்கம், மானத்தைச்
இணைத்து கொள்ளும் சில ஒட்டுண்ணிகள் உண்டு. இந்தச் ச
அனுகூலங்கள் இருந்தாலும், பொது வாழ்வை அசிங்கப்படுத்
தூரத்தில் நிறுத்தி வைக்க முடியுமா?

☐ கருணாநிதி எதிரிக்கு எதிரி, நண்பனுக்கு நண
சாதனங்கள் வழி, சிறப்பாக பத்திரிகைகள் வழி உங்களை
ஜனநாயக முறையில் நியாயமான போராட்டங்களில் ஈடுபடு
உங்கள் கையில் இருப்பதால் அவர்களை நேரடியாகவோ,
விமர்சனங்களையும் போராட்டங்களையும் தாங்கி நிற்கும்



நாங்கள் நம்புகிறோம்-நீங்கள்
நினைத்தால் உங்களால் முடியும்
ஒரே ஒரு சந்தேகம் !
நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்
நினைப்பீர்களா?

FREE E-BOOKS , www.thamizham.net.,

## ட்டுச் சொல்லுங்கள்
## வரே!



ல் பணம் செலவழித்தவர்கள் எல்லாரும்
ட்ட பணத்தை மீட்டெடுக்க, முறைகேடான
களால் முற்றிலும் தடுக்க முடியாவிட்டாலும்,

வரைதாம் அவற்றை ஒழிப்பவதாக் பாவலா செய்தே நம்
பொய்ப்பிக்க முடியுமா உங்களால்?

ம், அடிமை மோகங்கொண்ட பாமர மக்களும் கொண்ட தமிழ்
மொழியாகவும் நடைமுறையில் ஆக்க முடியா விட்டாலும்,
தம் உங்களுக்கு வருமா?

ல், விழாக்கள் எடுத்தல், ஊர்வலங்கள் நடத்தல் என்ற பழைய
ப்பான, எளிதில் விளம்பரம் பெற முடியாத, ஆக்கப்பூர்வமான,
கும், பகுத்தறிவு வளர்ச்சிக்கும் பெரியாரின் வைராக்கியத்தோடு

ந்தியை விட மிகுதியாக தமிழர்களைக் கலாச்சார அடிமைப்
கு இந்தி செய்த தீமைகளை விட ஆங்கிலம் செய்த தீமைகளே
நாட்டில் ஆங்கிலம் கட்டாயப்பாடம், தமிழ் விருப்பப்பாடம்
துடைத்தெறிவீர்களா?

டிவிட்டு அதிகாரம் இப்போது உங்கள் கைக்கு மாறியவுடன்,
காற்றில் பறக்க விட்டு, கூசாமல் எப்படியாவது உங்களுடன்
யநலப் புழுக்களைச் சேர்த்துக் கொள்வதால் உங்களுக்கு சில
தும் இந்தப் பன்முக மனிதர்களைத் தயவு தாட்சண்யமின்றி

ர்பன் என்பது உங்கள் சுயவிமர்சனம். பொது மக்கள் தொடர்பு
விமர்சிப்பவர்களை, நீங்கள் செய்யும் தவறுகளை எதிர்த்து
பவர்களை, உங்கள் எதிரியாக, நினைத்து, சகல அதிகாரங்களும்
மறைமுகமாகவோ ஒழித்துக் கட்டாமல், ஆக்கப்பூர்வமான
பேராற்றலுடன் உங்களால் விளங்க முடியுமா?

!

கள், முதல்வரே!



- எழில்.

FREE E - BOOKS , www.thamizham.net ,

## அஜீரண நிவாரண அட்டவணை

| எதைச் சாப்பிட்டால் அஜீரணம் | நிவாரணம் பெற சாப்பிட வேண்டியது |
|---|---|
| மாங்காய், மாம்பழம் | ஒரு கோப்பை பால் |
| அதிக நெய் | ஒரு கோப்பை எலுமிச்சை ரசம் |
| வாழைப்பழம் | சிறிது உப்பு, |
| கேக்குகள் (பேஸ்ட்ரி) | ஒரு கோப்பை வெந்நீர் |
| பால் அதிகம் சாப்பிடதால் | ஒரு கோப்பை மோர் |
| பலாப்பழம் | வாழைப்பழம் ஒன்று |
| தேங்காய் அதனால் செய்த பொருள் | கொஞ்சம் அரிசி |
| தண்ணீரினால் ஏற்பட்ட அஜீரணத்துக்கு | சிறிது தேன் |
| அதிக சாப்பாடு | சிறிது சுக்கும், வெல்லமும் சுவைக்கவும் |

*நன்றி: சுமங்கலி-நா.பாலன்*

## நண்பர்களே!

*சுட்டி விலை ஏற்றம் தவிர்க்க முடியாததாகிறது. நிர்வாகச் செலவு, காகிதம், கணிப்பொறி, நவீன அச்சமைப்புச் செலவுகள் அடக்க விலையை விட பன்மடங்கு உயர்ந்து விட்டதை ; கடந்த பலமாதங்களாகத் தாங்கி வந்தோம்; தொடர்ந்து தாங்க முடியவில்லை. எனவே மார்ச் இதழ் முதல் (எண்:97) சுட்டியின் விலை ரூ.1.00 ஆகிறது. 25 மாதங்களுக்குப் பிறகு செய்யும் இவ்விலையேற்றத்தை நம் வாசகர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என உரிமையுடன் எதிர்நோக்குகிறோம். இதழ் எண் 97 முதல் ஆண்டுச் சந்தா: ரூ 12; ஏற்கனவே சந்தா செலுத்தியவர்களுக்குப் பழைய விலையிலேயே சந்தா முடியும் வரை அனுப்பப்படும்*

*—ஆசிரியர்குழு*

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

☞ "சத்த எதிர்ப்புச்சங்கம்" பற்றிய சுட்டியின் கருத்தைப் படித்தேன். கேரளாவில் சத்த எதிர்ப்பு என்று ஒரு சங்கமாகத் தொடங்காவிட்டாலும் சத்தத்தை எதிர்த்து மக்கள் சத்தம் போடாமல் போராடிக்கொண்டு தாம் இருக்கிறார்கள். இதன் எதிரொலியாக அரசும் லவுட்ஸ்பீக்கர் வைப்பதற்குச் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

*- எஸ்.எஸ். மணி, திருவனந்தபுரம்.*

☞ "கனவும் கண்டுமற நாடகம்" இன்றைய நனவுதான். தேவை அதை மாற்றும் புதுக்கனவு.

*- மணிமொழி, பொள்ளாச்சி.*

☞ நம்ம ஊர் நண்டுகளையும், தவளைகளையும் பிடித்து வெளிநாடுகளுக்கு "பாக்" செய்து அனுப்பும் சில நிறுவனங்களைப் போல யாராச்சும், நம் ஊர் கரப்பான்களையும் பிடித்து அனுப்பினால் "பிசினஸ்" தூள் கிளம்புமே! உடனே C/o சுட்டி ஒரு "டின்" கரப்பான் நம்ம வூட்டிலேருந்து அனுப்பட்டுமா சார்?

*- திருமதி.நாரயணராவ், சென்னை-39.*

☞ நாடு வறுமை நிலை நோக்கி வேகமாக கீழிறங்கி வந்து கொண்டிருக்கும் இச்சமயத்தில் "கரப்பான் பொறியல்" கட்டுரை, ஏழைகளுக்கு மிகமிகப் பயனான ஒன்று.

*- பி. வேணாதாசன், முருங்கப்பேட்டை*

☞ தேர்தல் வெற்றி கார்டூன் இன்றைய உண்மை நிலையை எடுத்துக் காட்டியது.

*- ஏ.எஸ். குமார், பேய்க்குளம்.*

☞ ஜனநாயகம் என்ற போர்வையில் நடைபெறும் பணநாயகத் தேர்தலுக்குச் "சுட்டி"யின் சூடு சரியானது தான். தேவையில்லா சின்ன விஷயத்திற்கெல்லாம் திருத்தம் கொண்டு வரும் மத்திய அரசினர், அரசியல் தேர்தல் அமைப்பு முறையையே மாற்ற முயலவேண்டும்.

*- எம்.பி. இளங்கோ, பி.மேட்டுப்பாளையம்.*

☞ "அரசியலைக் கைப்பற்றியது - ஜாதிப்பேய்" கட்டுரை நன்றாக இருந்தது. இப்பொழுது இருக்கும் நிலையில் "அரசியலுக்கு அடிப்படை ஜாதிப் பேய்" என்று கட்டுரைக்குப் பெயரிட்டிருக்கலாம். ஏனெனில் "நீ என்ன ஜாதி ? எவ்வளவு பணம் செலவழித்தாய்?" என்ற இரு பேய்களின் அடிப்படையில் தாம் வேட்பாளர்களைத் தேர்வு செய்திருக்கிறார்கள்.

*- எஸ்.வி.ராஜசேகர், சேப்பாக்கம்.*



FREE E - BOOKS , www.thamizham.net.,

# துஷ்டனைக்கண்டு தூர விலகலாமா?

அன்புள்ள ரேவதிக்கு,

உன் 'சத்த எதிர்ப்புச் சங்கத்தில்', கொள்கை பரப்புச் செயலாளர் பதவியை எனக்குக் கொடுக்க முடியுமா? (அது சரி, சத்தமில்லாமல் எப்படிக் கொள்கை பரப்புவது?)

'உனக்கேன் ஊர் வம்பு?' என்று உன் அம்மா திட்டுவதாக எழுதியிருந்தாய். 'துஷ்டனைக் கண்டால் தூர விலகும்' இந்த மனோபாவம்தான், நம்முடைய பல சமூகத் தீமைகள் வளர்வதற்கான அடிப்படைக் காரணம், எல்லோரும் தூர விலகிவிட்டால், துஷ்டனுக்குக் கொண்டாட்டந்தானே "பாதகஞ் செய்பவரைக் கண்டால், பயங்கொள்ள லாகாது பாப்பா, மோதி மிதித்து விடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா" என்று பாரதி சொன்னதை மறந்து போய்விட்டோம்.

இந்த மனோபாவம், மனிதர்களின் சுயநலத்திலிருந்துதான் தோன்றுகிறது. (உன் அம்மாவைத் திட்டுவதாய் நினைத்துக் கொள்ளாதே; இது ஒரு பொதுவான விவாதம்). தனக்கு ஏதும் தீங்கு நேராத வரை, 'தானுண்டு, தன் வேலையுண்டு' என்று அமைதியாயிருப்பதும், பக்கத்திலிருக்கிறவன் அடிபடும்போதும், பாராமுகமாய் வீற்றிருப்பதும் அடக்க குணமில்லை - வெறும் சுயநலமும், கோழைத்தனமும்!

ஒரு மாந்தோப்பில் ஒரு மரத்தை வெட்டினால், பக்கத்தில் நிற்கும் மரம் 'ஏன் வெட்டுகிறாய்?' என்று கேட்காது. மனிதனும் அப்படித்தான் என்றால், பிறகு மரத்துக்கும், மனிதனுக்கும் என்ன வித்தியாசம்? 'மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்' என்று வள்ளுவன் சரியாய்த்தானே சொல்லியிருக்கிறான்!

'மக்கட்பண்பு' என்றால் என்ன? 'பிறிதின் நோய் தன்நோய் போல்' கருதாதவனிடம் என்ன பண்பு வாழும்? அடுத்தவன் துன்பத்தைக் களைய, சமூக நீதியை நிலைநாட்ட, தேவையான 'ஊர்வம்பு'களை இழுத்துப் போட்டுக் கொள்கிறவர்கள் இல்லாத சமூகம் அநாதையாக அல்லவா ஆகிப்போய்விடும்?

'நமக்கேன் ஊர் வம்பு?' என்று எல்லோரும் நினைத்திருந்தால், உலகில் காட்டுமிராண்டிகளின் தர்பார் அல்லவா களைகட்டியிருக்கும்?

'பூக்களைப் பறிக்கத் தாவும் கைகள், சாக்கடை தூர்க்கத் தயங்கிட லாமா?' என்னும் கவிஞர் இன்குலாப் கவிதையை, உன் அம்மாவிடம் மெதுவாய்ப் படித்துக் காட்டு!

தோழமையுடன்,

பாண்டியன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இந்திரா வைக் கொன்றவர்களின் ஆசைகள்

ஜனவரி 6!



கேஹர் சிங்

கேஹர் சிங், சத்வந்த் சிங் இருவரும் தூக்கிலிடப் பட்டதைக் கூட, 'ஆகாஷவாணி' தன் காலை செய்தி அறிக்கையில் கூறவில்லை. சாவகாசமாய்ப் பிறகு சொன்னது.

அவர்கள் செய்தது (இந்திராவைக் கொன்றது) நியாய மென்று நாம் வாதிடவில்லை. ஆனாலும் அவர்கள் விஷயத்தில் இந்திய அரசு நடந்து கொண்டவிதம் நியாயமேயில்லை என்பதை நாம் திட்டவட்டமாகத் தெரிவிக்க முடியும்.

கேஹர் சிங், குற்றவாளிதானா என்பதில் கடைசிவரை ஐயங்கள் நீக்கப்படவில்லை. `தாக்கர் கமிஷன்' அறிக்கை வெளியிடப்படவேயில்லை. உலக நீதிபதிகளின் (World Judges) வேண்டுகோளும், பத்திரிகையாளர்கள், ஜனநாயகவாதிகளின் வேண்டுகோளும் புறக்கணிக்கப்பட்டன. சாதாரண வழக்குகளில் கூட, சிறு சந்தேகம் இருந்தாலும், அந்தச் சந்தேகத்தின் பலனைக் (Benefit of doubt) குற்றவாளிக்குக் கொடுத்து விட வேண்டும் என்பது மரபு. ஆனால், அந்த மரபு இவ்வழக்கில் அடியோடு மறுக்கப்பட்டுவிட்டது.

இவ்விரு அரசியல் கைதிகளின் கடைசி ஆசை கூட நிறைவேற்றப்படவில்லை. தன்னைத் தன் சொந்த மண்ணில், தகனம் செய்ய வேண்டும் என்று கேஹர் சிங்கும், தன் உடல் உறுப்புகளைத் தானமாகக் கொடுத்துவிட வேண்டும் என்று சத்வந்த் சிங்கும் தங்களின் இறுதி ஆசையை வெளிப்படுத்தியிருந்தனர். எந்த ஆசையும் நிறைவேற்றவில்லை.

இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட இரவில் ஆயிரமாயிரம் சீக்கியர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனரே; அந்த நிகழ்ச்சிக்கு என்ன நீதி வழங்கப்பட்டது என்று பாஞ்சால மக்கள் எழுப்பும் கேள்விக்கு அரசு நியாயமாய்ப் பதில் சொல்லவில்லை.

சீக்கிய மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய நல்ல சந்தர்ப்பங்களை நாம் இப்படி நழுவ விடுகிறோமே— நியாயந்தானா?

— சுபவீ.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# வன்னியர் மீது வன்முறை

வன்னியர்கள் கோரிக்கை நியாய்மானதுதானா என்ற கேள்விக்குச் சுருக்கமாகப் பதில் சொல்லிவிட முடியாது ! ஆனால், அண்மையில் வன்னியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை நியாயமில்லை என்பதைக் கூறிவிட முடியும் !

வன்னியர் தலைவர்களுக்கும், காங்கிரசுக்கும் இடையில் ரகசியத் தொடர்பு இருந்திருக்குமோ என்று போன மாதம்



"சுட்டி" தன் சந்தேகத்தை வெளிப்படுத்தியது. அதிலிருந்து இப்போதும் பின் வாங்கவில்லை. ஆனால், உறவுகள் முறிந்து, நம்பிக்கைகள் பொய்யாக்கப்பட்ட பின், வெகுண்டெழுந்த வன்னியர்கள் மீது மத்திய அரசு, பயங்கர ஒடுக்கு முறையைப் பயன்படுத்தியுள்ளது.

சமீபத்தில், வழக்குரைஞர் பி.வி. பக்தவச்சலத்தின் தலைமையில், வன்னியர் பகுதிகளைப் பார்வையிட்டு வந்த 'உண்மை அறியும் குழு', சில திடுக்கிடும் உண்மைகளை வெளியிட்டுள்ளது. சனநாயக உரிமை பாதுகாப்புக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள, அக்குழுவின் அறிக்கையில் சில பகுதிகள் :-

✓ பயன்படும் பாத்திரங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், தறி, மிதிவண்டி, போன்றவை அழிக்கப்பட்டுள்ளன. எல்லா இடங்களிலும் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் உடைக்கப்பட்டுள்ளன.

✓ இதுவரை போராட்டம் நடக்கும் இடத்தில் அடிப்பது விரட்டுவது என்பது தான் காவல் துறையின் நடைமுறை. இந்த முறை சம்பவங்கள் நடந்த இடத்தைச் சுற்றி ஐந்து-பத்து கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்திற்குள் பீதியை உண்டாக்கும் நோக்கத்துடன், போலீஸ் திட்டமிட்ட தாக்குதலைத் தொடுத்திருப்து தெரிகிறது. இரவு நேரங்களில் 1 மணி, 2 மணி என்று போய், பொருள்களைச் சிதைப்பது, பெண்களை மானபங்கப்படுத்துவது என்று துன்புறுத்தியுள்ளது.

✓ இந்த அரசு வன்முறைக்கு "மஞ்சள் பூ தாக்குதல்" (Yellow Flower Operation) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதாம்.

ஈழத்தில் மட்டும்தான் IPKF என்று நினைத்தோம். உள்நாட்டிலுமா?

*- பாமரன்*

FREE E- BOOKS , www.thamizham.net.,

# பிரதமரின் சீனப் பயணம் வீணா?

நம் பிரதமர் ராஜீவின் சீனப் பயணம் பற்றி இருவேறு கருத்துக்களை அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர். `மாபெரும் வெற்றி' என்று இ.காங்கிரஸ் முழங்குவதில் அர்த்தமில்லை என்றாலும், `நல்ல தொடக்கம்' என்பதை யாரும் மறுக்க முடியாது.

ராஜீவின் பயணத்தால், 26 ஆண்டுகால இறுக்கம் தளர்ந்துள்ளது. அதே நேரத்தில் 1985 ஆண்டு சும்தராங் பள்ளத்தாக்குப் பகுதிக்கு இந்தியத் துருப்புகளை அனுப்பி, நிலைமையை மிகவும் இறுக்கமாக்கியவரும் ராஜீவ்தான் என்பது உண்மை. அயல்நாட்டு, உள்நாட்டுப் பிரச்சினைகள் எல்லாவற்றிலும் இப்படி `இரட்டை முகம்' காட்டுவது, ராஜீவின் `ஸ்டைலாக' உள்ளது.

சிக்கிம், திபெத் - இரண்டு பிரச்சினைகளில், 1954 ஆம் வருட ஒப்பந்தத்தை உறுதி செய்து, `திபெத்தில் எது நடந்தாலும், அது சீனாவின் உள்நாட்டுப் பிரச்சினைதான்' என்று ராஜீவ் தெளிவாக்கியிருக்கிறார். ஆனால், சிக்கிம் இந்தியாவில் இணைந்ததைப் பற்றிச் சீனா கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. `அருணாசலப் பிரதேசம் தன்னுடையதுதான்' என்று சீனா கூறி வருவதைப் பற்றியும் கூடப் பேச்சு எதுவும் எழவில்லை. ஆகவேதான், "போபர்ஸ் முதலான ஊழல்களில் சிதைந்து போன தன் செல்வாக்கைப் புதுப்பித்துக் கொள்ளவே, ஒரு பயனும் இல்லாத தன் சீனப் பயணத்தைப் பற்றி ராஜீவ் கொட்டி முழக்குகிறார்" என்று குல்தீப் நய்யார் போன்றவர்கள் கூறுகின்றனர்.

ஒட்டு மொத்தமாய் அப்படிக் கூறிவிட முடியாது. `காலவரையற்ற' முறையில்தான் என்றாலும், `விரைவில் எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்' என்று இருநாட்டுத் தலைவர்களும் முடிவு செய்திருப்பது நல்ல அறிகுறிதானே.

"பரஸ்பரம் விட்டுக் கொடுத்து முடிவு செய்து கொள்ளலாம்' என்று 1960 இல் சீனப் பிரதமர் சூ-யென்-லாய் அன்று சொன்னதுதான், இன்னும் கொஞ்ச நாளில் நடக்கப் போகிறது. அதை அன்றே கேட்டிருந்தால், ஒரு யுத்தமும், இருநாட்டு மக்களிடையே மனக்கசப்பும் வராமலே போயிருக்கும்.

— பாமரன்.

ஆசிரியர்: சு.நாராயணபாரதி, வெளியிடுபவர்: கி.இராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம்.எஸ்.ரவீந்திரன், 'எஸ்.ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை - 600 005. முகவரி 1494, அண்ணாநகர், சென்னை - 600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

தமிழ்த்திரைப் படங்கள்

# இசையும், பாட்டும்

சினிமாப் பாட்டு என்பது இயற்றமிழும் இல்லை; இசைத்தமிழும் இல்லை. ஒரு ரெண்டும் கெட்டான். மெலடி, ஹார்மனி, பாலிஃபோனி என்னும் மூன்று அடிப்படையான இசை வகைகளில், மெலடியிலிருந்து கிளைத்தனவே கர்நாடக சங்கீதமும், இந்துஸ்தானி இசையும். ஹார்மனியும், பாலிஃபோனியும் மேலை நாட்டுச் சங்கீதங்கள். இந்த எல்லா இசை வகைகளிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக் கொண்டு, நாட்டுப்புறப் பாடல் மெட்டுகளையும் கலந்து பாடப் பெறுகிற 'கலப்பிசை'யே திரைப்பட மெல்லிசையாகும்.

திரைப்படப் பாட்டு என்பதும் கவிதையாகாது. கவிதை ஒரு கலை; அதை உருவாக்குபவன் கலைஞன். திரைப்படப் பாட்டு என்பது ஒரு தொழில் நுட்பத் திறன். அதை உருவாக்குபவன் தொழில் நுட்ப வல்லுநன். (Technician).

திரைப்படப் பாடல் ஒரு கூட்டு முயற்சி. கவிஞன் தான் நினைப்பதை எழுதிவிட முடியாது. கதைக்கேற்பவும், இசைக்கேற்பவும் மட்டுமே எழுத வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

ஆகவேதான், நல்ல கவிஞர்களும் கூட, மோசமான பொருள் தரக்கூடிய சொற்களையும், பயனற்ற சொற்களையும் பாட்டில் பயன்படுத்துகின்றனர். ஆழமான கருத்துக்களைத் தந்துள்ள கண்ணதாசன் முதல், புதுமையான உத்திகளைக் கையாண்டு எழுதும் வைரமுத்து வரை, யாரும் இதற்கு விதிவிலக்கு இல்லை.

ஆனாலும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தனக்கென்று ஒரு தனி இடத்தை ஏற்படுத்திச் சென்றுள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை. அவர் பாடல்களில் ஓரிரு பாடல்களைத் தவிர, அனைத்தும் பொருள் ஆழம் மிக்கவையாகவே உள்ளன.

ஆனால், பொதுவாக இன்றையப் பாடல்களில் பல மோசமானவையாகத்தான் உள்ளன. மோசமான திரைப்படங்களை விட, இவை ஆபத்தானவை. வானொலி இல்லாத வீடுகள் இன்று கிராமங்களில் கூட இல்லை. ஆகவே, `எலந்தப்பழம்' `மாம்பழம்' பாடல்கள் வெகு விரைவாய் மக்களைச் சென்றடைகின்றன. `பாட்டுத் திறத்தாலே, வையத்தைப் பாலித்திடா' விட்டாலும் பரவாயில்லை, கெடுக்காமலாவது இருக்க வேண்டியது மிக அவசியமல்லவா!

— வசந்தா.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நம் அண்டை நாடுகளின் சுக துக்கங்கள்

**1988** -இல் நம்மைச் சுற்றியுள்ள நாடுகள் எல்லாவற்றிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்து போய்விட்டன.

அமைதியாய் இருந்த பர்மாவின் வீதிகளில், சென்ற ஆண்டு, ரத்த ஆறு ஓடியது. ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள், இரும்புக் கரங்களால் ஆட்சி நடத்திய நே வின் (Ne Win), மக்கள் எழுச்சிக்குப் பதில் சொல்ல முடியாமல், ராஜினாமா செய்ய நேர்ந்தது. 'எங்களுக்கு மக்களாட்சி வேண்டும்' (We want democracy) என்று பர்மாவில் மக்கள் எழுப்பிய முழக்கம், உலகம் முழுவதையும் உலுக்கியிருக்கிறது. ஆனாலும், பர்மாவில் ஒரு சரியான தீர்வு இன்னும் ஏற்படவில்லை.

எதிர்பாராமல், பாகிஸ்தானில் ஒரு பெரிய ஜனநாயக மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆகஸ்ட் 18 ஆம் தேதி, விமான விபத்தில் ஜியா இறந்து போனபின், அமைதியாய் அங்கே தேர்தல் நடந்து முடிந்து, 35 வயது பேநஸீர் பூட்டோ, பாகிஸ்தானின் முதல் பெண் அதிபராகியிருக்கிறார்.

அமைதியாயிருந்த பர்மாவில் போராட்டம் வெடித்தது. போராட்டம் நடந்து கொண்டிருந்த பாகிஸ்தானில், அமைதியான மாற்றம் ஏற்பட்டது.

11 ஆண்டுகள் ஜியா பதவியில் இருந்தார். அதே மாதிரி 11 ஆண்டுகள் பதவியில் இருந்த ஜெயவர்த்தனே, இலங்கையில், தன் பதவியைவிட்டு இறங்கியுள்ளார்.

ஆனாலும் இலங்கையில் நிலைமை வேறு! இலங்கையில் அதிபர் மாறியிருக்கிறாரே தவிர, ஆட்சி மாறவில்லை. ஆட்சியின் அராஜகப் போக்கும் மாறவில்லை. தெற்கு, வடக்கு இரு பகுதிகளிலுமே கொரில்லாப் போரும் முடிவற்றதாய்த் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதற்கிடையில், திடீரென்று கடந்த நவம்பரில், மாலத்தீவில், ஒரு கலகம் ஏற்பட, அதிபர் அப்துல் கயூம் இந்தியாவின் உதவியை நாடினார். உடனே இந்துமகா சமுத்திரத்தின் அநாதரட்சகனாகத் தன்னைக் கருதிக் கொண்டுள்ள ராஜீவ், படைகளை அனுப்பிக் கலகத்தை ஒடுக்கினார்.

பங்களாதேச மக்களைத்தான், இயற்கையின் சீற்றம், சென்ற ஆண்டு சிரழித்து விட்டது. செப்டம்பரில் பெரிய வெள்ளமும், நவம்பரில் ஒரு புயலுமாக, லட்சக்கணக்கான மக்கள் அவதிக்குள்ளாயினர்.

நம் அண்டை நாடுகளின் சுக துக்கங்களை மனிதநேயத்தோடு, நாம் தொடர்ந்து பங்கிட்டுக் கொள்வோம்.

— பழநி.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுயேச்சையாய் நிற்பவர்கள்

ஒரு விஷயம் கவனித்தீர்களா?

சமீப காலத்தில், ஒவ்வொரு தேர்தலிலும், ஒவ்வொரு தொகுதியிலும் 30, 40, 50 என்று சுயேச்சைகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. இந்தத் தேர்தலில் கூட 2088 சுயேச்சைகள் போட்டியிட்டு இரண்டுபேர் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர். அரசியல் கட்சிகளுக்குள் அடங்காமல், சுயசிந்தனை கொண்ட சுயேச்சைகள் வளர்வது நல்லதுதானே என்று தோன்றலாம். ஆனால் சுயசிந்தனை யோடு களத்துக்கு வரும் சுயேச்சைகள் எத்தனைபேர் என்று கணக்குப் பார்க்க வேண்டாமா?

யோசித்துப் பார்த்தால், சுயேச்சைகளாய் போட்டியிடுவதில் அவர்களுக்குப் பல லாபங்கள் உள்ளன. 1. போட்டியிலிருந்து வாபஸ் வாங்க, தாராளமாகப் பேரம் பேசலாம் 2. ஒரு சட்டசபைத் தொகுதிக்கு 30 ஆயிரம் வரை செலவு செய்யலாம் என்று அரசு அனுமதி வழங்கியுள்ளது (உண்மையில், லட்சக்கணக்கான பணம் புரள்கிறது என்பது வேறு விஷயம்). அதைப் பயன்படுத்திக் கொண்டு, ஒரு பைசா கூடச் செலவழிக்காமல், 30 ஆயிரம் ரூபாய்க் கறுப்பை வெள்ளையாய் மாற்றும் வித்தை செய்யலாம். 3. வேட்பாளர்களில் ஒருவர் என்ற முறையில், தேர்தல் வரையில், வேட்பாளர்களுக்குள்ள சலுகைகள் அனைத்தையும் அனுபவிக்கலாம் 4. பெரிய பெரிய தலைவர்கள் போட்டியிடும் தொகுதியில் எல்லாம் எதிர்த்து நிற்பதின் மூலம், ஏகப்பட்ட விளம்பரம் பெறலாம் 5. தப்பித் தவறி வெற்றி பெற்றுவிட்டால், மந்திரி பதவி வரைக்கும் முயற்சி செய்யலாம்!

இத்தனை லாபமிருக்கிறது. இவர்களால் தேர்தல் நடைமுறையிலும் பல சிக்கல்கள் வருகின்றன. வாக்குச் சீட்டுகள் மிகப் பெரியதாகி விடுவதால், ராட்சத வாக்குப் பெட்டிகள் தேவைப்படுகின்றன.

ஆகவே, சுயசிந்தனையும், உண்மையான சேவை உணர்வும் கொண்ட சுயேச்சை வேட்பாளர்கள் பாதிக்கப்பட்டுவிடாமல், இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும்.

டெபாசிட் தொகையை உயர்த்தலாம், முன் மொழியும், வழி மொழியும் நபர்களின் எண்ணிக்கையும் கூடுதலாக இருக்க வேண்டும் என்று விதி கொண்டு வரலாம்!

வேறு என்னென்ன செய்யலாம்? தேர்தல் கமிஷனும், மக்களும் இதுபற்றி விவாதித்தால், வேறு நல்ல வழிகளும் தெரியாமலா போய்விடும்?

– மது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சின்னஞ்சிறு கதைப் போட்டி

முதல் பரிசு: ரு 100

இரண்டாம் பரிசு: ரு 25

தேர்ந்து வெளியிடப்படும் அனைத்துச் சிறுகதைகளுக்கும் இரண்டாம் பரிசு உண்டு.

விதிகள்: ❐ சிறுகதைகள் சுட்டியின் ஒரு பக்கத்திற்குள் அமைய வேண்டும் (சுமார் 180 சொற்கள்)

❐ கதைக் கரு சமூகப்பார்வையுடையதாக இருத்தல் அவசியம். ❐ இப்போட்டி சுட்டி வாசகர்களுக்கு மட்டுமே. எனவே பக்கத்தில் உள்ள வாசகர் வில்லையை வெட்டியிணைத்து அனுப்புதல் வேண்டும். ❐ ஒருவரே எத்தனை கதைகளையும் அனுப்பலாம்; ஒவ்வொரு கதையுடனும் வெட்டியிணைப்பு அவசியம். ❐ கிடைக்க வேண்டிய இறுதிநாள் : 28-2-89.

❐ ஏப்ரல் 89 இதழில் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும். ❐ உறைமேல் 'சின்னஞ்சிறுகதைப் போட்டி' எனக் குறிப்பிடுங்கள்.

இரு மாதங்களுக்கு ஒரு முறை புதுப்புதுசுட்டி வாசகர் போட்டிகளை எதிர்பாருங்கள்! அடுத்த போட்டி அறிவிப்பு: மார்ச்சு '89 இதழில்.

## சுட்டி சந்தா

12 இதழ்களை அஞ்சலில் பெற ரூ.10 பணவிடை (M.O.) செய்யுங்கள். ஒவ்வொரு இதழையும் தவறாமல் பெற சாந்தாதாரராவதே சரியான வழி. முகவரி: சுட்டி: AP-638, H பிளாக், அண்ணாநகர், சென்னை-600 040.

## சுட்டி இலவசம்

நீங்கள் பெற்ற பயனை உங்கள் நண்பர்களும் பெறட்டுமே! சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக்கூடிய புதியவர்கள் முகவரிகள் எவ்வளவு வேண்டுமாயினும் அனுப்புங்கள். உங்கள் சார்பில் அவர்களுக்கு ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

பதிவு எண்: TN/MS (N) 317




சுட்டி தொடர்பு முகவரி

A P - 638, H பிளாக், அண்ணா நகர், சென்னை - 600 040.

ttp://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்களஞ்சியம்
FREE E - BOOKS , www.thamizham.net.,